**தலைப்பு 193 - தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு - 2024**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 193 - தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2025 யூன் 24 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 23 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 6/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2024 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தில் சேவையை விட்டுச்சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டின் ரூபா 206,501 தொகையான கடன் மீதியொன்று நிலவியதுடன், தொழில் பிரிவில் உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து ரூபா 114,575 ஆன தொகை அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. | கடன் மீதியை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | கடன் மீதியை வசூலிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 2022 திசெம்பர் 29 ஆந் திகதி தொழிலாளர் பிரிவில் பணிபுரியும் போது இறந்த ஒரு உத்தியோகத்தரின் இடர் கடன் மீதியான ரூபா 230,300 தொகை 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட முடியாததாக காணப்பட்டது. | கடன் மீதியை பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | -மேற்படி- |

**(அ) புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் தொழில் பிரிவின் சேதங்கள் தொடர்பில் பதிவேடொன்று பேணப்பட்டிருந்த போதிலும், அது நாளதுவரையாக்கப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் இந்த நிலைமையை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சேதங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட வேண்டும். |

**2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களை குறிப்பிடுகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**3. நிதி மீளாய்வு**

**3.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் XLVII ஆம் அத்தியாயம் | | ஜயகமு ஸ்ரீ லங்கா நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்தும் போது உரிய விழா முகாமையாளருடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் 3.1.1 **(IX)** நிபந்தனையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்ட முகாமையாளரின் செலவில் இசை நிகழ்ச்சியொன்று நடாத்தப்பட வேண்டியதுடன், அதன் **(X)** நிபந்தனைக்கமைய நிகழ்ச்சியில் பங்குபற்றும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் இரவு நேர உணவு வழங்கப்பட வேண்டும் எனும் நிபந்தனை விதிக்கப்பட்டிருந்ததுடன், இந்த செயற்பணி தாபனவிதிக் கோவையின் | உத்தியோகத்தர் களின் அர்ப்பணிப்பு மற்றும் வழங்கப்பட்ட சேவையைப் பாராட்டுவதற்காக இரவு நேர சுமுக சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள து. | நிலவும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களி ன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | **II** ஆம் தொகுதியில் உத்தியோகத்தர்களின் நடத்தை மற்றும் ஒழுக்கம் தொடர்பான நிபந்தனைகளுக்கு முரணாக செயற்படுவதற்கு இடமளிப்பதாக அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 104(1) | நட்டமொன்று அல்லது இழப்பொன்று ஏற்பட்டவுடன் உடனடியாக அதன் அளவு காரணத்தை திட்டவட்டமான அறிந்துகொள்ளுதல், அதற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களை நிர்ணயிப்பதற்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2023 மே 20 ஆந் திகதி தெற்கு அதிவேக வீதியில் விபத்திற்குள்ளான கெப் வண்டியின் விபத்து தொடர்பில் சுமார் 2 வருட கால தாமதமொன்ற இடம்பெற்றிருந்த போதிலும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விசாரணைகள் 2025 யூலை 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் நிறைவு செய்யுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்பது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2016 திசெம்பர் 16 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | | | |
| | (i) 3.1 ஆம் பிரிவு | அமைச்சிற்கு சொந்தமான 17 வாகனங்களுக்காக எரிபொருள் எரிவுப் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டின் போது உரிய முறையில் வாகனங்களின் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு கணக்காய்வுக்கு விடயங்களை அறிக்கையிட நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) 06 ஆம் பிரிவு | அனைத்து உத்தியோகபூர்வ வாகனங்களுக்கும் நியமிக்கப்பட்ட ஓட்டுநர்கள், அந்த மாதத்தில் நிகழ்த்தப்பட்ட போக்குவரத்து சேவைகளின் பதிவுகளைப் பராமரிக்கவில்லை. | எதிர்காலத்தில் போக்குவரத்து சேவை பதிவுகளைப் பராமரிக்க தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. | -மேற்படி- |

### 3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதில் "புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் ஆற்றிய பெரும் பங்களிப்பைப் பாராட்டுவதற்காக புலம்பெயர்ந்தோர் சந்திப்புத் திட்டத்தை நடத்துவதற்காக" 2024 யூன் 26 ஆந் திகதி அன்று சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின்படி, தெற்கு, வடக்கு மற்றும் மேல் மாகாணங்களில் மூன்று (03) நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் ஒப்புதல் அளித்திருந்தார். வடக்கு மாகாணத்தில் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்வதற்கு 2024 யூலை 21 ஆந் திகதி குருநாகல் (வடமேல் மாகாணம்) ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டதாகவும், இந்த செயல்முறை அமைச்சரவையின் தீர்மானத்திற்கு முரணாக இருப்பதாகவும் அவதானிக்கப்பட்டது. | யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்தத் நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்பாடு செய்வதில் இருந்த நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக, வடமேல் மாவட்டத்தில் இந்தத் திட்டத்தை நடத்த முடிவு செய்யப்பட்டது, ஆனால் இது தொடர்பாக அமைச்சரவைக் குறிப்பை சமர்ப்பிக்க முடியாதுள்ளது என்பது. | அமைச்சரவையின் பரிந்துரையின்படி செயல்படாததற்கான காரணங்களை ஆராயப்பட வேண்டும். |

### 3.3 மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கலகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஜயகமு ஶ்ரீ லங்கா (Glocal Fair) எனும் பெயரில் நாடு முழுவதும் 24 மாவட்டங்களை | பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடையே உரிய பணிணை ஒப்படைப்பதற்கு | பெறுகைகள் வழிகாட்டிக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கும் வகையில் நடமாடும் சேவைத் தொடரொன்றை நடாத்துவதற்கு விழா முகாமையாளர் ஒருவர் (Event Manager) தெரிவு செய்யும் பெறுகை நடைமுறையின் போது தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் பெறுகைகள் குழுவிற்கு கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் கம்பனிகள் பதிவு செய்வதற்குரிய தகவல்கள் கிடைத்திருந்த போதிலும், அந்த தகவல்களை கருத்திற்கொள்ளாது, ஒரே பணிப்பாளர் சபையால் நிருவகிக்கப்படும் நிறுவன ரீதியாக மாத்திரம் இரு வேறு பெயர்களை கொண்ட இரு நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தன. அதற்கமைய அமைச்சின் பெறுகைகள் குழுவினால் விழா முகாமையாளர் ஒருவரை தெரிவு செய்தல் முறையற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிறுவனமொன்றை தெரிவு செய்யும் பணிக்கு அதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் பங்களிப்புடன் பெறுகைகள' குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது என்பது. | |
| (ஆ) | மேற்படி நிகழ்ச்சித்திட்டம் சுய நிதியிடல் முறைமைக்கமைய செயற்படுத்தப்படுவதாக 2023 திசெம்பர் 05 ஆந் திகதி முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், செலவின மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2024 சனவரி 08 ஆந் திகதி இரு நிறுவனங்களுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் 3.2(ix) பிரிவின் பிரகாரம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்திற்கு 20 குடில்கள் காசு செலுத்தும் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் எனவும், அதற்காக முகவர் நிறுவனத்திடமிருந்து பணம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், | அவதானிப்புகளுடன் இணங்குகின்றமை | பெறுகை இணக்கப்பாடுகள் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படாமை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

அமைச்சினால் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் செஸ் வரி வருமானத்தின் மூலம் செலுத்துமாறு எழுத்து மூலம் பணியகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 எதிர்பார்த்த அடைவு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசின் தேசிய கொள்கையின் அடிப்படையில் நிறுவப்பட்டு தொழிலாளர் விடயங்களுக்கு உரியதாக கொள்கை உருவாக்கம், நிகழ்ச்சித்திட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தல், மேற்பார்வை மற்றும் பின்தொடர்தல் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், தற்போதைய தேவைகளுக்கு பொருந்தும் வகையில் ஒருங்கிணைந்த தொழிலாளர் சட்ட சீர்திருத்தம் (unified Labour Law Reform) முழுமையடையவில்லை என்பதும், 2024 ஆம் ஆண்டில் சட்டத்தில் 2 புதிய திருத்தங்கள் மட்டுமே செய்யப்பட்டிருப்பதும் அவதானிக்கப்பட்டது. | ஒரே வேலைவாய்ப்பு வரைபாக தயாரித்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவது பொருத்தமானது என்று முடிவு செய்யப்பட்டதால், அந்தத் திருத்தங்களை முன்னோக்கி மேற்கொள்ளல் நிறுத்தப்பட்டு, அமைச்சரவையின் ஒப்புதலுடன் 13 சட்டங்கள் ஒன்றாக தயாரிக்கத் திட்டமிடப்பட்ட புதிய வரைபிற்கு அனைத்தும் உள்ளடக்கப்பட்டது என்பது. | தொழிலாளர் விடயங்களுக்குரிய கொள்கை உருவாக்கம் செயற்திறனாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | அமைச்சின் விடயப்பரப்பிற்கு அவசியமான பொதுமக்கள் சேவைகளை திறமையான மற்றும் பொதுமக்களுக்கு உகந்த முறையில் வழங்குவதாகக் கூறியிருந்தாலும், தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேம நிதியத்தின் சலுகைகள் செலுத்தும் தீர்மானங்களை செயல்படுத்துவது 50-74 சதவீத அளவில் நிலவியமை மற்றும் தொழில் திணைக்களத்தின் முறைபாடுகளின் முகாமைத்துவ கட்டமைப்பு சரியாக செயல்படாமை. | தரவுக் கட்டமைப்பிற்கு அலுவலகத்தினால் முறைப்பாடுகளை பதிவு செய்வதுடன், அது தொடர்பில் தொடர்ச்சியான கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகின்றமை. | பொதுமக்கள் சேவைகளை செயற்திறனாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | தொழிற்சங்கங்களை பதிவு செய்யவும், அரச மற்றும் தனியார் துறைகளில் உள்ள அனைத்து தொழிற்சங்கங்களின் செயற்பாடுகளை நாட்டின் அபிவிருத்திக்காக பயன்படுத்தவும் தேவையான சாதகமான நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள போதிலும், தொழிலாளர் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட 1935 இன் 14 ஆம் இலக்க தொழிற்சங்க கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட தொழிற்சங்கங்கள் தமது செயற்பாடுகளை புதுப்பிப்பதற்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளாதபோது அவற்றின் பதிவை இரத்து செய்து பொதுமக்களுக்கு அறிவிக்கும் நடைமுறையொன்று இல்லாதிருந்தமை. | தொழிற்சங்கங்களை இரத்து செய்வது தொடர்பான சட்டத்தின் ஏற்பாடுகளின்படி தொடர்புடைய தொழிற்சங்கங்களுக்கு மட்டுமே தெரிவிக்கப்படுகிறது என்பதுடன், பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தல் இடம்பெறவில்லை என்பது மேலும் பதிவுசெய்யப்பட்ட அனைத்து தொழிற்சங்கங்கள் பற்றிய தகவல்களும் இணையதளத்தில் வெளியிடப்படவில்லை என்பது. | பொதுமக்களுக்குத் அறிவூட்டுவதற்கு ஒரு நடைமுறை உருவாக்கப்பட வேண்டும். |
| (ஈ) | தேசிய மனிதவலு வேலைவாய்ப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சிடம் பணிப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், 2025 ஆம் ஆண்டளவில் தேசிய மனிதவலு வேலைவாய்ப்புக் கொள்கை உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய மனிதவலு வேலைவாய்ப்புக் கொள்கை தொடர்பில் மேலதிக பணிகளை மனிதவள அபிவிருத்திக்கான தேசிய சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றமை. | பொருத்தமான திருத்தங்களை மீண்டும் மேற்கொண்டு கொள்கை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | விரயம் மற்றும் ஊழலை ஒழித்து அமைச்சின் பணிப்பொறுப்பை நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவும் வகையில் நவீன முகாமைத்துவ முறைகள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் நடைமுறைகளையும் சீர்திருத்துவது அமைச்சின் முக்கிய பணியாக | கோவைகளின் தகவல்களை கணினிமயமாக்குவதற்கான கணினிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் போதுமான அளவு இல்லாதிருந்ததுடன் உரிய முறையில் செயற்படாத காரணத்தால் அவற்றை இதுவரை நிறைவேற்ற முடியாதுள்ளமை மற்றும் எதிர்காலத்தில் கணினிகள் மற்றும் | தகவல்களை கணினி மயப்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்தபோதிலும், இழப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, தொழிலாளர்களின் இழப்பீடு வழங்கும் செயல்முறையை நீண்டகாலமாக பின்பற்றியதால், நாளதுவரையாக்கப்பட்ட தகவல்களைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டது. | உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்த பின்னர் இந்த நடவடிக்கைகள் நிறைவேற்றப்படும் என்பது. | |
| (ஊ) | தேசிய உற்பத்தித்திறன் செயலகத்திற்கு இணைப்பு செய்யப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் 2024 ஆம் ஆண்டு ஆரம்ப திட்டங்கள் மற்றும் செயன்முன்னேற்றம் தொடர்பில் மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளை உற்பத்தித்திறன் எண்ணக்கருவின் ஊடாக ஊக்குவிப்பதற்கு, அரச துறையின் நடைமுறையை மேம்படுத்தல், 5s சான்றுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டம், உற்பத்தித்திறன் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் போன்ற நோக்கங்களை போதிய அளவில் நிறைவேற்ற முடியாதிருந்தது. | தொடர்புடைய செயல்பாடுகளைச் நிறைவேற்றும் நடைமுறை மற்றும் மேம்படுத்தப்பட்ட செயல்முறைகள் பற்றிய தகவல்கள் காணப்படுகின்றமை. | இலக்கிடப்பட்டவாறு செயலாற்றல் மட்டத்தை அடைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | தொழிலாளர் சட்டங்கள் மற்றும் விதிகளின் நெகிழ்வுத்தன்மையை அதிகரிப்பது அமைச்சின் நோக்கமாக இருந்தாலும், தொழில் திணைக்களத்தால் செயல்படுத்தப்பட்ட 20 கட்டளைச் சட்டங்களில், 5 நியதிச் சட்டங்கள் உள்ளமை மற்றும் மீதமுள்ள கட்டளைச் சட்டங்களை நிகழ்காலத்திற்கு பொருந்தும் வகையில் உரிய திருத்தங்கள் மந்த கதியில் மேற்கொள்ளப்படுகின்றமை. | சட்டங்களைத் திருத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | தொழிலாளர் விடயத்திற்குரிய சட்டங்கள் மற்றும் விதிகளை நிகழ்காலத்திற்கு பொருந்தும் வகையில் திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| உற்பத்தித்திறன் செயலகத்தினால் 2015 ஆம் ஆண்டில் ரூபா 1,465,200 ஆரம்ப செலவில் கொள்வனவு செய்யப்பட்ட ebreeze கணினி கட்டமைப்பின் பராமரிப்புக்காக 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள் ரூபா 5,434,095 செலவிடப்பட்டுள்ள போதிலும், கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் முகாமைத்துவம், விழா நடவடிக்கைகளின் உருவாக்கம் ஆகிய சந்தர்ப்பங்களுக்காக கணினிக் கட்டமைப்பு பயன்படுத்தப்படாத காரணத்தால் ஈடுபடுத்தப்பட்ட பணம் பொருளாதார ரீதியாக பயனுள்ளதாக காணப்படவில்லை. | பொதுவான அலுவலக கடமைகளுக்காக பயன்படுத்தப்படும் பிரிவின் உடன்படிக்கையை நீடிப்பு செய்யும் போது இது தொடர்பில் மீளாய்வு செய்வதற்கு உத்தேசித்துள்ளமை. | வளங்களை திறம்பட பயன்படுத்த வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களுக்கு இணைப்பு செய்யப்பட்டுள்ள உற்பத்தித்திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 5 வருடத்திற்கு மேற்பட்ட காலம் ஒரே அலுவலகத்தில் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன், உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் உரிய முறையில் இடம்பெற்றிராத காரணத்தால், இடமாற்றம் தேவையான உத்தியோகத்தர்களின் சந்தர்ப்பம் இழக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | 2026 ஆம் ஆண்டுக்கான உள்ளக இடமாற்ற நடைமுறையை செயல்படுத்துவதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன என்றும், உள்ளக இடமாற்ற நடைமுறைக்கு மேலதிகமாக அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்ற நடைமுறைக்கு விண்ணப்பிப்பதற்கு எந்த தடையும் இல்லை என்றும், அந்த வருடாந்த இடமாற்றங்களைப் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு அந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பது. | இடமாற்ற நடைமுறை முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களான தேசிய தொழில் கற்கைகள் நிறுவனம் மற்றும் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனம் ஆகிய இரு நிறுவனங்களின் பிரதான நிறைவேற்றுத்தர பதவிகளான பணிப்பாளர் நாயகம் பதவியில் பதிற்கடமை அடிப்படையில் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். | இதற்காக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகள் பிரதமர் அலுவலகத்தின் விசேட குழுவிற்கு 2025 பெப்ரவரி 27 மற்றும் 2025 மார்ச் 24 ஆந் திகதிகளில் அனுப்பப்பட்டது என்பது. | பிரதான நிறைவேற்றுத்தர பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் நிரந்தரமாக நியமிக்கப்பட வேண்டும். |